

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 26.01.2026


# இந்தியாவை வளர்த்து விட்டாரா மோடி?

**இதுவரை உலகப் பயணத்தில் இருந்த பிரதமர் மோடி, இனி அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வருவார். இங்கே தேர்தல் வரப்போகிறது. அதனால் அவரது தலையை அடிக்கடி பார்க்கலாம்.**

மதுராந்தகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய மோடி சொன்னதிலேயே பெரிய பொய் எது என்றால், 'இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடு என்ற இலக்கை நோக்கி முன்னேற்றி விட்டேன்' என்று அவர் சொன்னதுதான். இந்தியாவை அவர் எந்தெந்த வகையில் எல்லாம் முன்னேற்றி இருக்கிறார் என்பதை பட்டியல் போட்டு இருந்தால் பாராட்டலாம். அப்படி எதுவும் இல்லை.

**ஐக்கியநாடுகள் சபையின் வளர்ச்சித் திட்டம் 2025 அறிக்கையின் படி உலகத்தில் உள்ள 193 நாடுகளில் இந்தியா 130 ஆவது இடத்தில் இருக்கிறது.** இந்திய மக்களின் வாழ்க்கைத்தரம், கல்வி, மருத்துவம், தனிநபர் வருமானம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கணிப்பை அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். உலக நாடுகள் வரிசையில் இந்தியா எந்த இடத்தில் இருக்கிறது என்று பாருங்கள்.

**சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி தனிநபர் வருமானத்தில் 196 நாடுகள் கொண்ட பட்டியலில் இந்தியா 144 ஆவது இடத்தில் இருக்கிறது.** உலக நாடுகளின் வரிசையில் இந்தியா எந்த இடத்தில் இருக்கிறது என்பதைப் பாருங்கள்.

இந்தியாவின் பொருளாதாரத்தை அவர் வளர்த்துள்ளாரா? இந்தியப் பொருளாதாரத்தை 5 ட்ரில்லியன் டாலர் அளவுக்கு உயர்த்த இலக்கு வைத்துள்ளார். இதற்காக உயர்த்த ஆண்டுக்கு 8 விழுக்காடு வளர்ச்சி தேவைப்படுகிறது. ஆனால் அவர் அப்படி வளர்த்திருக்கிறாரா இல்லை. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.8 அளவிலேயேதான் இருக்கிறது.

இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு குறைந்து வருகிறது. இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்குமான இடையிலான இடைவெளி நிரப்ப முடியாததாக இருக்கிறது.

**டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருகிறது. ரூபாயின் மதிப்பு 92 ரூபாயைத் தாண்டிச் செல்வது இந்தியப் பொருளாதாரத்தின் மாபெரும் சவால் ஆகும். மோடி பிரதமராகப் பதவியேற்றபோது 58.58 ரூபாயாக இருந்தது. அவர் குஜராத் முதலமைச்சராக இருந்த போது, அமெரிக்க டாலருக்கு இணையான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவதைப் பார்த்து, அதற்கு காங்கிரஸ் அரசின் ஊழல்தான் காரணம் என்று குற்றம் சாட்டினார். அந்த வகையில் பார்த்தால், பா.ஜ.க. ஆட்சியின் ஊழல்கள் இரண்டு மடங்கு அதிகம் ஆகி இருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.**

இந்திய மக்கள் அதிகமாக வேளாண்மையைச் சார்ந்து உள்ளார்கள். அதில் எந்த முன்னேற்றத் திட்டமும் இல்லை. உற்பத்தி துறையில் மந்த நிலைமை உருவாக்கும் வகையில் தான் ஒன்றிய அரசின் திட்டங்கள் உள்ளன. உணவுப் பொருள்கள், அவசியப் பொருட்கள், முக்கியப் பொருட்களின் விலைகள் அதிகமாகி உள்ளன. விலைவாசி உயர்வு ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டை மீறியதாக ஆகிவிட்டது.

இந்தியப் பங்குச் சந்தை தொடர்ந்து சரிவைச் சந்தித்து வருகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியப் பங்குச் சந்தையில் இருந்து தங்கள் முதலீடுகளைத் தொடர்ந்து வெளியேற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஜனவரி மாதத்தில் மட்டும் இதுவரை பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பங்குகளை விற்பனை செய்துள்ளார்கள்.

**அந்நிய நேரடி முதலீடு இந்தியாவில் குறைந்துள்ளது. முதலீடு செய்தவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மோடி அரசு இழந்துவிட்டது. குறிப்பிட்ட ஒருசில நிறுவனங்களுக்குச் சாதகமான அரசாக மட்டுமே மோடி அரசு இருக்கிறது. அனைத்து தொழில் நிறுவனங்களும் சம வாய்ப்பை தரும் அரசாக இல்லை.இவர் சொல்லும் சுயச்சார்பு என்பது அதானிகளுக்கு மட்டுமே வளர்க்கும்.இந்திய அரசின் வளங்களை அதானிக்கு தாரை வார்ப்பது மோடி அரசாங்கத்தில் வெளிப்படையாக நடந்துள்ளது.**

அமெரிக்க கொடுத்து வரும் பொருளாதார நெருக்கடியை நெஞ்சுரத்துடன், துணிச்சலாகத் தாங்கும் மனவலிமையில் மோடி அரசாங்கம் இல்லை.சீன ஆக்கிரமிப்பை, கண்டுகொள்ளாமல் மறைக்கிறது மோடி அரசாங்கம். மோடிக்கு, சின்ன நாடான இலங்கை கூட பயப்படவில்லை. இந்திய மீனவர்களை துணிச்சலாக கைது செய்வதை இலங்கை இன்னமும் நிறுத்தவில்லை.

**வேளாண்மையை இலாபமான தொழிலாக மாற்றுவேன் என்றார். மாற்றினாரா? உழவர் வருமானம் இரண்டு மடங்கு ஆகும் என்றார். இரண்டு மடங்கு ஆனதா? இல்லை. இரண்டு ஆண்டு காலம் தொடர்ந்து போராடி, 200 பேர் மரணம் அடைந்ததுதான் மோடி ஆட்சி காலம் ஆகும்.**

**கருப்புப் பணத்தை ஒழித்துவிட்டு ஒவ்வொருவர் வீட்டுக்கும் 15 லட்சம் போடுவோம் என்றார்கள். போட்டார்களா? இல்லை. கருப்புப் பணத்தையாவது ஒழித்தார்களா? இல்லை.**

**ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம் என்றார் மோடி. தந்தாரா? இல்லை. வேலை இழப்புதான் அதிகம். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை. பக்கோடா விற்கப் போகச் சொல்கிறார் உள்துறை அமைச்சர்.**

பணமதிப்பிழப்பு நடவடிக்கையானது இந்தியப் பொருளாதாரத்தைச் சீரழித்தது. அது இன்னமும் மீளவில்லை. எதற்காக அதைச் செய்தார்கள் என்ற மர்மம் இதுவரை விலகவில்லை.

தீவிரவாதம், பயங்கரவாதம், வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதா? இல்லை. காஷ்மீரில் தீவிரவாதம், பயங்கரவாதம் தொடர்கிறது. மோடி, அமித்ஷாவின் சட்டம் ஒழுங்குக்கு சாட்சி மணிப்பூர். மூன்று ஆண்டுகளாக அந்த மாநிலத்தில் வன்முறை நிற்கவில்லை. அங்கு இவர்கள் போவதும் இல்லை.

மொத்தத்தில் இந்தியாவில் இருந்தால் இதையெல்லாம் பார்க்க வேண்டும் என்று நினைக்கும் பிரதமர் பெரும்பாலும் வெளிநாட்டில் இருக்கிறார். தேர்தல் நடக்கும் மாநிலத்துக்கு தேர்தல் நேரத்தில் வருகிறார். இந்தியா என்ன நிலைமையில் இருக்கிறது என்றே தெரியாமல் பேசுகிறார்.

**எதேச்சதிகாரத்தால் வகுப்புவாதத்தை வாழ வைத்து, இந்தியாவில் ஆட்சி நடத்தி விடலாம் என்று நினைக்கும் மோடி ஆட்சிக்கு எண்ணிக்கையைக் குறைத்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே மக்கள் பாடம் கற்பித்தார்கள். அதில் இருந்து அவர் பாடம் கற்கவில்லை. தமிழ்நாட்டு தேர்தல் முடிவுகள் தக்க பாடத்தைக் கொடுக்கும்.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2026) தமிழ்மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப்போராட்டத்தின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்துறந்த திருவாளர்கள் தாளமுத்து நடராசன் ஆகியோரின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து, வீரவணக்கம் செலுத்தினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் சுதர்சனம், தாயகம்கவி, ஆர்.டி.சேகர், ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், ஐட்ரீம் மூர்த்தி, கே.பி.சங்கர், கழக மாணவர் அணி செயலாளர் இராஜீவ்காந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2026) சென்னை, எழும்பூர் தாளமுத்து நடராசன் மாளிகை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள திருவாளர்கள் தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோரது மார்பளவு திருவுருவச்சிலைகளை திறந்து வைத்தார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம்கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், க.கணபதி, அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகரராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2026) தமிழ்மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப்போர்த் தியாகி, சமூகப் போராளி டாக்டர்.எஸ்.தருமாம்பாள் அம்மையார் அவர்களது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் சுதர்சனம், தாயகம்கவி, ஆர்.டி.சேகர், ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், ஐட்ரீம் மூர்த்தி, கே.பி.சங்கர், கழக மாணவர் அணி செயலாளர் இராஜீவ்காந்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள்!

# அன்றும் இன்றும் என்றும் இந்திக்கு இங்கே இடமில்லை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, ஜன. 26-

மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள்: அன்றும் இன்றும் என்றும் இந்திக்கு இங்கே இடமில்லை!**

**மொழியை உயிராய் நேசிக்கும் ஒரு மாநிலம், இந்தித் திணிப்புக்கு எதிராக ஒன்றுதிரண்டு போராடியது. திணித்த ஒவ்வொரு முறையும் அதே வீரியத்தோடு போராடியது.**

**இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு மொழிவழித் தேசிய இனங்களின் உரிமையையும் அடையாளத்தையும் காத்தது.**

**தமிழுக்காகத் தங்கள் இன்னுயிரையே ஈந்த அந்தத் தியாகிகளை நன்றியோடு வணங்குகிறேன்.**

**மொழிப்போரில் இனி ஒரு உயிரும் போகாது; நம் தமிழுணர்வும் சாகாது! இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா - புதிய வழிமுறைகள்!

### தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, ஜன.26-

தொல்காப்பிய பூங்கா தொடர்பாக 21.1.2026 அன்று நாளிதழில் வெளியான செய்திக்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் அளிக்கப்படும் விளக்கம் பின்வருமாறு:-

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் புதுப்பிக்கப்பட்டுள்ள தொல்காப்பிய பூங்கா 24.10.2025 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்படி அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைகள்படி, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு குறிப்பிட்ட அளவிலான பார்வையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். அதனால் தற்போது ஓர் அமர்விற்கு 250 பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்.

தொல்காப்பியப் பூங்காவில் பொதுமக்கள் நடைப்பயிற்சிக்காக காலை 6.30 மணி முதல் 8.00 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையும் 365 நாள்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்விக்காக கல்வி நிறுவனங்கள் மூலம் மாணவ, மாணவியர் திங்கள்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை (வியாழக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாள்கள் நீங்கலாக)

காலை 9:30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை அனுமதிக்கப்படுகிறார்கள். பொதுமக்களுக்கான வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணம் திங்கள்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை (வியாழக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாள்கள் தவிர) பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை அனுமதிக்கப்படுகிறது.

சீரமைப்பிற்குப் பிறகு நடைப்பயிற்சிக்காக அனுமதி பெற்றவர்கள் நீங்கலாக 24.10.2025 முதல் இன்றுவரை 6,843 மாணவ, மாணவியரும் 20,233 பொதுமக்களும் பூங்காவைப் பார்வையிட்டு மகிழ்ந்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு, மேற்கொண்ட இச்சுற்றுச்சூழல் சீரமைப்பின் விளைவாக அடையாறு சிற்றோடை மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் அண்மையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, 549 வகையான உயிரினங்கள் இப்பூங்காவில் உள்ளன. சீரமைப்பிற்கு முன்பு 2011ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 141–ஆக மட்டுமே இருந்தது. தற்போது, தொல்காப்பியப் பூங்கா நகர்ப்புர ஈரநில உயிரிப் பல்வகைமையின் வாழ்விடமாகத் திகழ்கிறது. சீரமைப்பிற்கு முன்பு பூங்காவில் நடைப்பயிற்சிக்கு 1.95 கி.மீ. தூரம் இருந்தது.

தற்போது சீரமைப்புக்குப் பின் கூடுதலாக 1.25 கி.மீ வசதி ஏற்படுத்தப்பட்டு, மொத்தம் 3.20 கி.மீ நடைப்பயிற்சிக்கு தற்போது காலை மற்றும் மாலை இருவேளைகளில் அனுமதிக்கப்படும் பொதுமக்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட அளவை எட்டி உள்ளதால், புதியவர்களுக்கு அனுமதி வழங்க இயலாத நிலை உள்ளது. ஆனால் 2.30 மணி முதல் 4.30 மணி வரை அனைத்துத் தரப்பினருக்கும் இப்போதும் அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த அனுமதி பெறுவதற்கு பொதுமக்களுக்குத் தடையேதுமில்லை. எனினும் நடைப்பயிற்சி மேற்கொள்ளுவதற்காக, கோரிக்கைகள் அதிகமாக உள்ளதால் கூடுதல் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தற்போது 500 என்ற எண்ணிக்கையில் உள்ள நடைப்பயிற்சி அனுமதியை 1.2.2026 முதல் 3000 என்ற எண்ணிக்கையில் உயர்த்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நடைப்பயிற்சி அடையாள அட்டை மூன்று வண்ணங்களில் வழங்கப்படும். ஒவ்வொரு வண்ண அடையாள அட்டை பெற்ற பயனாளிகளும் வாரத்தில் மூன்றுமுறை வந்து நடைப்பயிற்சி மேற்கொள்ளலாம். அதற்கான நடைப்பயிற்சி அடையாள அட்டை பெறுவதற்கான திருத்திய கட்டணமாக ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.500/– என்று இருப்பது தற்போது ரூ.250/– ஆகவும், 3 மாதங்களுக்கு ரூ.1500/– என்று இருப்பது ரூ.750/– ஆகவும், 6 மாதங்களுக்கு ரூ.2500/– என்று இருப்பது ரூ.1250/– ஆகவும், 12 மாதங்களுக்கு ரூ.5000/– என்று இருப்பது ரூ.2500/ ஆகவும் குறைத்து நிர்ணயிக்கப்படும்.

ஒவ்வொரு அமர்விலும் 300 பார்வையாளர்கள் மட்டுமே பூங்காவினுள் இருக்கும் வகையில் முறைப்படுத்தப்படுவார்கள்.